1986 மே 2]

மதுக்கரை அசோசியேட்ட் சிமெண்ட் கம்பெனி தொழிலாளர்கள்.

628—(*வினா எண். 3086)—திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் மதுக்கரையில் உள்ள அசோசியேட்ட் சிமெண்ட் கம்பெனியில் கில்லன் பிரிவில் ஐந்து கில்லன்கள் உள்ளதை மாற்றி ஒரே நவீன கில்லன் மட்டும் அமைக்கப் போவதால் பல தொழிலாளர்கள் வேலை இழக்கும் ஆபத்து வர உள்ளது அரசின் கவனத்திற்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில், இந்த நவீன இயந்திரம் புகுத்தப் படுவதால் தொழிலாளர்கள் வேலை இழக்காமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மதுரை ஜெய்ஹிந்துபுரம் அங்காடி.

629—(*வினா எண். 5709)—திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை "ஜெய்ஹிந்துபுரம்" காய்கறி மார்க்கெட்டுக்கு, மதுரை மாநகராட்சி மூலம் தனியாக இடம் ஒதுக்கிக் கட்டிடம் கட்டித் தரும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த "ஜெய்ஹிந்துபுரம்" மார்க்கெட்டிற்கு உட்பட்ட 'எம்.கே. புரம், ஜீவா நகர், டி.வி.எஸ். நகர்' போன்ற சுமார் 10,000 குடும்பங்கள் அடங்கிய பகுதிகளுக்குப் பயன் பெறுகின்ற மார்க்கெட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த